Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்
facebook.com/nimirvu http://youtube.com/Nimirvu www.nimirvu.org
பார்வை – 45 சித்திரை, வைகாசி 2021 பக்கங்கள் – 20 விலை – ரூபா 20.00

# நினைவு கூரலை மக்கள் மயப்படுத்த வேண்டும்



முருங்கை இலை செய்கைகளை அதிகரிக்க வேண்டும்



நெருக்கடியான காலங்களில் சன்னமாக ஒலித்த குரல் ஆயருடையது



எங்களின் சேமிப்புகள் அரசியல் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கான முதலீடாக மாற வேண்டும்

- ஆராயும் அறிவே நிமிர்வு -

# எம் விவசாயிகள் முருங்கை இலை செய்கைகளை அதிகரிக்க வேண்டும்



-துருவன்-

**"மாற்றுப் பயிர்கள் குறித்து சிந்திக்கும் விவசாயிகள் முருங்கையை இலைக்காக வளர்ப்பது குறித்து தீவிரமாக சிந்தித்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்"**

யாழ்ப்பாணம் – கோப்பாயில் சத்தூண் பொதினர் நிறுவனத்தின் இயக்குனர் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் அவர்கள் முருங்கை தொடர்பிலான பல்வேறு தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருப்பவர். முருங்கை இலை உற்பத்தி, ஏற்றுமதியை தன் வாழ்வுமுறையாகவும், தொழில்முறையாகவும் கொண்டவர். முருங்கை தொடர்பிலான பல தகவல்களை வைத்திருக்கும் பெரும் தகவல் களஞ்சியமாக, பொக்கிசமாக விளங்கி வருகிறார். இவர் மிக வயதான காலத்திலும் முருங்கை தொடர்பிலான பல்வேறு கருத்தரங்குகள், அறிவூட்டல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். முருங்கை தொடர்பிலான பல்வேறு தகவல்களையும் அவர் இங்கு பகிர்ந்து கொள்கிறார்.

நான் பிறந்து வளர்ந்த இடம் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி என்கிற கிராமம். எங்களுடைய சிறு வயதிலிருந்து எங்கள் வீட்டின் பின் பகுதியில் 25 க்கும் குறையாத முருங்கை மரங்கள் இருக்கும். என்னுடைய அப்பம்மா முருங்கை இலையில் கூடுதலாக கவனம் செலுத்துவதை பார்த்திருக்கின்றேன். முருங்கையிலை வறை செய்வது, கூழ் காய்ச்சும் போது, நண்டு சமைக்கும் போது முருங்கை இலை சேர்ப்பது கட்டாயம் நடக்கும்.

எங்கள் வீட்டிலேயே பல்வேறு விதமான முருங்கை வகைகள் இருந்தன. வீட்டில் உள்ள வயதானவர்களுக்கு எந்த இன முருங்கை இலையை எப்படி உணவில் சேர்ப்பது என்கிற பக்குவம் தெரிந்திருந்தது. இங்குள்ள முருங்கை மரங்களை யார் நாட்டியது என என்னுடைய சிறிய வயதுகளில் அப்பம்மாவிடம் கேட்டால், தனக்கும் தெரியாது, தானும் இந்த வளவுக்குள் வரும் போது முருங்கை நின்றது என்பார். முருங்கைக்கு ஒரு தொன்மையான வரலாறு இருக்கிறது. முருங்கை தொடர்பிலான பழமொழிகளும் உள்ளன.

'முருங்கையை நட்டவன் வெறுங்கையோடு போவான்' என்கிற பழமொழி உண்டு. இதற்கு தவறான அர்த்தம் புரிந்து கொண்டு பலர் தங்களது வீடுகளில் முருங்கை மரத்தை நடுவதை தவிர்த்து விடுகிறார்கள். ஏனெனில் முருங்கை மரத்தை நட்டால் எல்லாவற்றையும் அழித்து விடும் என எண்ணி தான் முருங்கை நடுவதை தவிர்கிறார்கள். இதற்கு உண்மையான அர்த்தம் என்ன?

ஒருவர் முருங்கை மரத்தை வீட்டில் வளர்த்தால் அவருக்கு பூ, காய், இலை என்று அனைத்தும் பயன் தரக்கூடியவை. முருங்கை இலை, உடலை இளமையோடும் ஆரோக்கியத்தோடும் வைத்துக் கொள்ள கூடிய மூலிகை. இவற்றை தினமும் யார் உணவில் பயன்படுத்துகிறாரோ அவர் வயதானாலும் தடி ஊன்றாமல் வெறுங்கையோடு நடந்து செல்வார்கள். இதைத்தான் நம் முன்னோர்கள் "முருங்கையை நட்டவன் வெறுங்கையோடு போவான்" என்று சொல்லி வைத்தார்கள்.

இன்னொரு பழமொழி உண்டு 'முருங்கை முன்னூறு நோயைத் தீர்க்கும்.' அது போல் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு தேவையான முக்கிய போசணை சத்துகளை முருங்கை இலை கொண்டுள்ளது.

அந்தக் காலத்தில் முருங்கை முறிந்தால் நல்ல சகுனமாக பார்ப்பார்கள். அப்போது தான் மிக வீரியமான தழைகள் வந்து மூச்சாக கிளை பரப்பி இன்னொரு வீரியமான மரமாக மாறும் தன்மை முருங்கைக்கு உண்டு.

முருங்கையை ஆங்கிலத்தில் Miracle Tree என்றும் அழைக்கிறார்கள். பேச்சு வழக்கில் மட்டுமல்ல விஞ்ஞான ரீதியாகவும் அற்புதமான மரமே முருங்கையாகும். முருங்கை தொடர்பிலான ஆய்வுக் கட்டுரைகள் உலகம் முழுதும் உள்ள அறிவி யலாளர்களால் எழுதப்பட்டுள்ளன.

நாங்கள் சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து 30 வருடங்களுக்கு பின் எங்களது பிறந்த வீட்டு வளவுக்கு திரும்ப போகும் போது அங்கே இருந்த தாவரங்களில் நாங்கள் அவதானித்த விடயம் முக்கியமானது. பலா, மா, தென்னை மரங்கள் ஒன்றும் இருக்கவில்லை. இப்பிலிப்பில் மரங்களால் எங்கள் காணிகள் இடம் தெரியாமல் மூடப்பட்டிருந் தன. இதனோடு சேர்ந்து முருங்கையும் அழியாமல் இருந்தது. அதனுடைய ஸ்திர தன்மையை நிலை பேறான தன்மையை நாங்கள் அறியலாம். ஊட்டச் சத்துக்களில் மட்டுமல்ல எந்த சூழ்நிலைக்கும் ஈடு கொடுத்து தப்பி பிழைத்து வளரும் மரமாக முருங் கையை சொல்லலாம். அதனால் தான் அதனை அற்பு தமான மரம் என்கிறோம்.

முருங்கை இலை தொடர்பில் ஆய்வு முறை களுக்கூடாக சொல்லப்படுகிற தகவல் யாதெனில், முட்டை, தயிர், பால்பொருள்களில் உள்ளதை விட பலமடங்கு புரதச் சத்து முருங்கையிலையில் உள்ளது. பாலை விட பன்மடங்கு கல்சியம் உள்ளது. ஏனைய எந்தவொரு தனித் தாவரத்திலும் இல்லாத 90 வகையான ஊட்டச் சத்துகள் முருங்கை இலையில் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்திகளை தூண்டுகிற அமினோ அமிலங்கள், பல்வேறு வகையான விற்றமின்கள் முருங்கை இலையில் உள்ளன.

முருங்கையில் பல்வேறு வகையான மரங்கள் இருந்தாலும், இலைக்காக நாங்கள் மரத்தை தெரிவு செய்யலாம். உலர்த்திய இலைக்கு சர்வதேச சந்தை

**"முருங்கை இலை தொடர்பில் ஆய்வு முறைகளுக்கூடாக சொல்லப்படுகிற தகவல் யாதெனில், முட்டை, யோகட், பால்பொருள் களில் உள்ளதை விட பலமடங்கு புரதச் சத்து முருங்கையிலையில் உள்ளது. பாலை விட பன்மடங்கு கல்சியம் உள்ளது"**

யில் பெரும் கிராக்கி உள்ளது. முருங்கை இலை நன்கு பச்சையமாக இருப்பின் அதனை உலர்த்தி பதப் படுத்தி விற்கும் போது கூடுதல் சந்தைப் பெறுமானங் கள் உண்டு.

யாழ்ப்பாண முருங்கை என்கிற பாரம்பரிய இனம் தென்னிந்தியாவிலும் பிரபலம். இதன் காயின் நீளம், காயின் திரட்சி. சதைப்பிடிப்பு என்பன நன்றாக இருக்கும், கறியும் வாய்க்கு ருசியாக இருக்கும்.

எமது பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு முருங்கை பயிரிடல் எந்த அளவுக்கு நன்மையாக அமையும்? இன்று மாற்று பயிர்களை நாங்கள் செய்ய வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை தோட்டப் பயிராக செய்ய முடியாது என்கிற எண்ணம் பலருக்கு இருக்கின்றது.

இங்கே கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட நெல்லியடி, கரணவாய், கெருடா வில் போன்ற இடங்களை சூழவுள்ள 15 க்கும் மேற்பட்ட கிராமங்களில் முருங்கையை பெரும் தோட்டங் களில் காய்க்காக வளர்க்கின்றனர். முருங்கை செய்கை இலாபகரமானதாக மாறி வருகின்றது. இன்னொரு இடம் மண்கும்பான். அங்கேயும் காய்க் காக பெருமளவில் முருங்கையை வளர்க்கின்றார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# பெருந்தொற்று காலத்திலும் தொடரும் பேரினவாத அடக்குமுறை

கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் தமிழர் தாயக பகுதிகளிலும் அதிகரித்து வருகிறது. இந்தியாவைப் போல் இலங்கை மாறும் நிலை ஏற்படும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தொற்றை குறைக்க ஒரே வழி தடுப்பூசி தான் என மருத்துவர்களால் சுட்டிக் காட்டப் படுகிறது. ஏழை நாடுகள் இதுவரை அதன் சுகாதார பணியாளர்கள் மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய தரப்பினருக்குக் கூட தடுப் பூசியை போடவில்லை. இந்நிலையில் பணக் கார நாடுகள் சிறுவர்களுக்கும், இளம் வயதி னருக்கும் தடுப்பூசி போட திட்டமிட்டு வருவது மோசமான சுயநலவாத செயற்பாடு என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தடுப்பூசி போடப்பட்டவர்களில் 44% பேர் உயர் வருமானம் கொண்ட நாடுகளைச் சோர்ந்த வர்களாவர். இவ்வாறான நாடுகளில் உலக மக்கள் தொகையில் 16% பேர் வசிக்கின்றனர்.

உலக மக்கள் தொகையில் 9% வசிக்கும் 29 குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் வெறும் 0.3% அளவு தடுப்பூசிகள் மட்டுமே போடப்பட்டுள்ளன. இவ்வாறான தடுப்பூசி பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகளவு இறப் புக்களை உலகம் சந்திக்க நேரிடும் எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலும் நாளுக்கு நாள் தொற் றாளர்கள் அதிகரித்த வண்ணம் உள்ளார்கள். இப்போதே மருத்துவமனைகள் நிரம்பி வழிய தொடங்கி விட்டன. பெருந்தொற்று பெருமழிவோ எதுவாயினும் சிங்கள பேரின வாதம் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளிலேயே அதீத கவனம் செலுத்தி வருகின்றது.

வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் இராணுவ வெற்றி சின்னங்கள் அமைக்கப் பட்டுள்ள நிலையில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவு சின்னம் அடித் துடைக்கப்பட்டிருக்கிறது.

சம்பவத்துக்கு முதல்நாளிரவு அப்பகுதி முழுமையான இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர் தான் மேற்படி மிலேச்சத்தனமான சம்பவம் அரங்கேறி இருக் கிறது. முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்கு கொண்டு வரப்பட்ட நடுகைக் கல்லும் காணா மல் ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எதிராக உள்ளூரிலிருந்து சர்வதேசம் வரை கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

உலகசமூகம் தமிழ் மக்களுக்கு வழங்கிய அனைத்துலக நீதியான நிலைமாறு கால நீதிப் பொறிமுறை இங்கே கேள்விக் குள்ளாக்கப்பட்டிருக்கிறது. அதன் முக்கிய தூணான மீளநிகழாமை மீது தாக்குதல் நடாத் தப்பட்டிருக்கிறது.

பெருந்தொற்று காலமாகையால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தே விளக்கேற்றி நினைவுகூரல்களை மேற்கொள்ளுமாறும், வீட்டிலேயே முள்ளிவாய்க்கால் உப்புக் கஞ்சியை காய்ச்சி குடும்ப உறவுகளுடன் பகிர்ந்துண்டு நினைவுப் பகிர்வுகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்குமாறு தமிழ் அரசியல், சிவில் சமூக அமைப்புக்களால் கோரப்பட்டுள்ளது.

- செ. கிரிசாந் -

அட்டைப்படம் :- குமணன்

# முள்ளிவாய்க்கால் உப்புக்கஞ்சி - நினைவலைகள்



"இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம்"

இசைப்பிரியன்

2009 இறுதிப் போர் காலப்பகுதியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டோடிய எம் மக்களின் பசியாற்றியது கஞ்சி தான்.

சிறிய கொட்டில்களுக்குள் பெரிய பெரிய கிடாரங்களில் கஞ்சி காய்ச்சப்பட்டிருக்கும். கையில் பாத்திரங்களுடன் கிலோமீற்றர்கள் தாண்டியும் மக்கள் வரிசையில் நின்று கஞ்சியினை பெற்று செல்வார்கள். அளவான பாத்திரத்தில் ஒரே அளவிலான கஞ்சி தான் அனைவருக்கும் பரிமாறப்பட்டது. முள்ளிவாய்க்கால் வரை, இறுதிவரை பயணித்தவர்களின் கஞ்சி அனுபவங்கள் கீழே,

மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என பெரும் துயரமான நிலையில் பயணம் நகர்ந்த போது அனைவரது உயிரைப் பாதுகாத்தது இந்தக் கஞ்சிக் கொட்டில்கள் தான்.

மாத்தளனில் பச்சையரிசி, தேங்காய்ப்பால், சீனி சேர்த்த கஞ்சி கிடைத்தது. பின் முள்ளிவாய்க்காலில் வெறும் தண்ணீரில் அரிசியை அவித்து அதற்குள் உப்பு போட்ட கஞ்சியே எம் உயிரை பாதுகாத்தது.

வரிசையில் கஞ்சியை பெற்றுக் கொண்டிருக்கும் பொதுமக்கள் மீதும் செல் விழும். சில வேளைகளில் கஞ்சிக் கிடாரத்துக்குள்ளும் விழும். அப்படி விழும் போது மக்கள் சிதறி ஓடுவார்கள். பின் சிறிது நேரத்தில் இன்னொரு கஞ்சிக் கொட்டில்களை நோக்கி ஓடுவார்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த அந்தக் கஞ்சியை முள்ளிவாய்க்கால் கஞ்சி என்ற பெயருடன் வருடாந்தம் வைகாசி 18 அன்று வீடுகளில் தயாரித்து குடும்பத்தினருடன் சேர்ந்து உண்போம். இளைய தலைமுறைகளுக்கு நினைவுகளை கடத்துவோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீண்ட போது சாப்பிட்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் சந்ததிகளுக்கு நினைவுகளை கடத்தினார்களோ அதே போல் ஈழத்தமிழர்களாகிய நாங்களும் வைகாசி 18 அன்று முள்ளிவாய்க்கால் கஞ்சியை உண்போம்.

உதாரணமாக வீட்டில் இருக்கும் மூத்தவர் ஒருவர் (தாத்தா, பாட்டி) தங்கள் பேரப்பிள்ளைகளுக்கு அந்த உப்புக் கஞ்சியை ஒருநேர உணவாக குடிக்க கொடுக்க வேண்டும். அப்போது அந்த பிள்ளைகள் ஏன் இதனை குடிக்க வேண்டும் என கேட்பார்கள். அப்போது எம்மினம் இத்தீவில் பட்ட அவலங்களையும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பையும் சொல்லி அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டும்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம்.

இம்முறை பெருந்தொற்று அதிகரித்துள்ள நிலையில் அவரவர் வீடுகளிலேயே நினைவேந்தலையும் செய்து அன்று ஒரு நேரமாவது முள்ளிவாய்க்கால் உப்புக் கஞ்சியை அருந்துவோம்.

# எங்களின் சேமிப்புக்கள் அரசியல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான முதலீடாக மாற வேண்டும்



-செல்வின்-

எங்களது சேமிப்புகள் யாவும் முதலீடுகளாக, நிறுவன ஆற்றல்களை பெருக்குபவையாக மாற வேண்டும். எங்களது சேமிப்புகள் ஒரு ஆக்கபூர்வ மான நிதிப் பொறிமுறையூடாக சமூகத்தின் முதலீட் டுப் பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும். அதற் காக நம்பிக்கை மிகுந்தவர்களாக நாங்கள் மாற வேண்டும். சமூகத்தில் நம்பிக்கையைப் பெற்ற வர்களைக் கொண்டு இதனை நிலைநிறுத்த வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கின்ற சென்னை தொழிநுட்ப நிறுவனம் போன்ற கட்டமைப்புக்களையாவது நிறுவி எங்கள் மனித வளத்தை செம்மைப்படுத்த வேண்டும்.

1990 களின் ஆரம்பத்தில் திருகோண மலையின் துறைமுகத்தில் மிகப்பெரிய கைத் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை உருவாக்குவ தற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தோம். அங்கு வந்த முதலீட்டாளர்கள் கேட்ட கேள்வி: இங்கு கப்பல் கட்டும் தொழில், கப்பலை உடைக் கும் தொழில், கப்பலை திருத்தும் தொழில் போன்றவற்றை உருவாக்குவதாக இருந்தால் கடல் சார் தொழிற்துறைகளை பயின்ற இளையோர்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள்?

குறித்த கேள்விக்கு அங்கு வந்திருந்த எவராலும் பதில் சொல்ல முடியவில்லை. அப்படி யான பயிற்சி நெறிகளும் எங்களிடம் இருக்க வில்லை. அத்துறையில் பயிற்றப்பட்ட இளைஞர் களும் எங்களிடம் இல்லை. ஆகவே வந்த முத லீட்டாளர்கள் இப்படியான ஒருவர் கூட இல்லை யென்றால் இப்படியான தொழிலை இங்கே ஆரம் பிக்க முடியாது. மனித வளம் இல்லாமல் யாரை நம்பி தொழிலை தொடங்குவது என கேட்டு விட்டு சென்று விட்டார்கள். நாங்கள் பெரும் தொழில் முயற்சிகளை கவர வேண்டும் என்று சொன்னால் எங்களின் மனித வளத்தை அதற்குப் பொருத்தமானவர்களாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றும் போது தான் அவர்கள் இங்கு வருவார்கள்.

## “எந்தவொரு அழிந்து போன தேசமும் தன்னை மீளக் கட்டியது என்று சொன்னால் அதற்குப் பின்னால் இருப்பது உறுதியான நிதி நிறுவனமாக இருக்க முடியும்”

எங்களிடம் உள்ள தொழிநுட்ப ஆற்றல்கள், வினைதிறன்கள், எங்களுடைய உழைப்பு, ஆர்வம், அக்கறை என்பவற்றை கருத்தில் கொண்டு தான் தொழில் முனைவாளர்களும் கைத்தொழில் முதலீட் டாளர்களும் எங்களுடைய பிரதேசத்துக்கு வந்து முதலீடு செய்வார்கள். எனவே எங்களது மனித வளத்தை நாங்கள் அதற்கேற்ற மாதிரி மாற்ற வேண்டும். அவற்றை கூர்மைப்படுத்த வேண்டும். அவற்றை செழுமைப்படுத்த வேண்டும். அதற்கு நாங்கள் பொருத்தமான வகையில் சர்வதேச தரமுள்ள தொழிநுட்பக் கல்லூரிகள், பயிற்சி நெறிகள் போன்றவற்றை மேற்கொள்ளும் நிறுவனங்களோடு எமது சமூக நிறுவனங்களை இணைக்க வேண்டும். வர்த்தக நிறுவனங்களை உருவாக்க வேண்டும். உற்பத்தி நிறுவனங்களை உருவாக்க வேண்டும். தொழிநுட்ப நிறுவனங்களை உருவாக்க வேண்டும். கணக்கீட்டு நிறுவனங்களை உருவாக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் நிதி நிறுவனங்களை உருவாக்க வேண்டும்.

எந்தவொரு அழிந்து போன தேசமும் தன்னை மீளக் கட்டியது என்று சொன்னால் அதற்குப் பின்னால் இருப்பது உறுதியான நிதி நிறுவனமாகத் தான் இருக்க முடியும். அது தான் ஜெர்மனுடைய

வரலாறாக இருக்கக் கூடும், ஜப்பானுடைய வரலாறாக இருக்கக் கூடும். ஏன், இஸ்ரேலுடைய வரலாறாகக்கூட இருக்கக் கூடும். அவர்களுக்கு பின்னால் நின்றது அவர்கள் உருவாக்கிய வங்கிகள். அபிவிருத்தி நோக்கிய மீள் புனருத்தானத்துக்கான வங்கிகளாக அவை செயற்பட்டமையினால் தான் அங்கே தொழிற்துறை வளர்ந்தது. பொருளாதார புனரமைப்பு நடந்தது. ஆனால் எங்களிடம் அந்த வாய்ப்பு துப்பரவுக்கு இல்லாமல் போய் விட்டது.

எங்களிடம் இருக்கும் வங்கிகள் எல்லாம் கொழும்பில் இருந்து நெறிப்படுத்தப்படுகின்றன. தொழில்முனைவாளனுக்கான கடனைக் கொடுப்ப தாக இருந்தால் கூட இரண்டு அரசாங்க உத்தி யோகத்தரின் பிணை கொண்டுவா என்று கேட்கின்ற, தான் கொடுக்கின்ற கடனை எப்போது அறவிடலாம் என்று கேட்கின்ற வங்கிகளாகத்தான் இருக்கின்றன. தான் நிதியை கடனாக வழங்குகின்ற முதலீட்டாளன் வளருகின்றானா அவனுடைய சவால் என்ன என அறிந்து அந்த சவாலை நிவர்த்தி செய்வதற்கு உதவி செய்யாமல் அவனுடைய கடனை மாதம் மாதம் அறவிட்டு முடிக்கின்ற இலக்குள்ள வங்கிகள் தான் இங்கே இருக்கின்றன. அந்த வங்கிகளால் தேசம் மீண்டெழ முடியாது. நாங்கள் தேசத்தைக் கட்டி யெழுப்பவும் முடியாது.

ஆனால் இந்த வங்கிகள் எல்லாமே எம் மக் களின் சேமிப்பில் தான் இயங்குகின்றன. இந்த வங்கிகள் கொண்டுள்ள முழுச் சொத்துகளும் எங்கள் மக்களுடைய சேமிப்புகள். எனவே நாங்கள் எங்களுக்கென்று நிதி நிறுவனங்களை உருவாக்க வேண்டும். அந்த நிதி நிறுவனங்கள் எங்களுடைய கைத்தொழில்களை கைகொடுத்து உயர்த்துபவை யாக இருக்க வேண்டும். இலகு நிபந்தனைகளின் அடிப்படையில் வெறும் கடன் கொடுப்பனவுகளுக்கு அப்பால் புலமைசார் அறிவியல் ஆலோசனைகளை, தொழிநுட்ப ஆலோசனைகளை, சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை கொடுத்து அந்த கைத்தொழில் களை எடுத்து நிமிர்த்தி மேலே கொண்டு வந்து தோளோடு தோள் கொடுத்து நகர்த்தும் வங்கிகளாக இருத்தல் வேண்டும்.

இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சியின் பின்னால் இந்திய கைத்தொழில் அபிவிருத்தி வங்கி இருக்கிறது. அவர்கள் வெறுமனே கடன்களை வழங் குபவர்கள், அறவிடுபவர்களாக மட்டும் அல்லாமல் ஒரு தொழில் முயற்சியை வளர்த்தெடுப்பவர்களாக இருக்கின்றார்கள். அத்தகைய நிதி நிறுவனங்கள் இங்கு கட்டமைக்கப்பட வேண்டும். இலங்கையின் சட்ட வரையறைகளுக்குள் செய்ய வேண்டியவற்றை செய்யலாம். அல்லது மாற்று தெரிவுகளுக்கு ஊடாக நிதி நிறுவனங்களை வலுவாகக் கட்டியெழுப்ப வேண்டும். எங்களுக்கு இன்று முதன்மையாக வும் பற்றாக்குறையாகவும் இருப்பது எங்களுக்கு சார்பான ஒடுக்கப்பட்டு வீழ்ந்த சமூகம் மீளெழு வதற்கு சாதகமான நிதி நிறுவனங்கள் இங்கில்லா மையே ஆகும்.

நிதி நிறுவனங்கள் என்றால் வங்கிகள் மட்டுமல்ல. குத்தகைக் கம்பனிகள் போன்றவையும் அவற்றுக்குள் அடங்கும். யுத்தத்துக்கு பின்னரான எமது சமூகத்தை சீரழித்த சக்திகளில் முதன்மையானது இந்த குத்தகை நிதிக் கம்பனிகள் ஆகும். இந்த குத்தகை நிதிக் கம்பனிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து மக்களை விடுதலை செய்ய வேண்டும். அதற்கான பொறிமுறைகளை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும். எங்களிடம் மிகச் சிறந்த கிராமிய வங்கிப் பொருளாதாரம் உண்டு. ஆனாலும் எமது சமூகம் தன்னையறியாமலேயே இந்த குத்தகை நிதிக் கம்பனிகளின் கடன்பொறிக்குள் சிக்குப்பட்டுப் போயுள்ளது. தாங்கள் குடியிருக்க முடியாத சிறிய வீட்டுக்குள்ளேயே தேவையற்ற வீட்டு சாதனங்களை குத்தகை நிதி மூலம் பெற்றுக் கொண்டு பின்பு குத்தகைக் காசு கட்ட முடியாமல் பறிகொடுத்துக் கொண்டு சங்கடப்படுகின்ற எத்தனையோ குடும்பங் கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் முறியடிக்கப் பட வேண்டும் என்று சொன்னால் எங்களிடம் ஆக்க பூர்வமான நிதி நிறுவனங்கள் ஒன்றல்ல பல நிதி நிறுவனங்கள் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படை யிலும் போட்டி சந்தையில் நின்று பிடிக்கக்கூடிய இலாபகர தத்துவத்தின் அடிப்படையிலும் உருவாக்கப் பட வேண்டும். அவர்களால் எங்களின் பொருளா தாரம் வலுவூட்டப்பட வேண்டும்.

எங்களுடைய காப்புறுதிக் கம்பனிகளும் கூட இந்தச் சமூகத்தில் தேவைகளையும், இடர்பாடு

**"குத்தகை நிதிக் கம்பனிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து மக்களை விடுதலை செய்ய வேண்டும். அதற்கான பொறிமுறைகளை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டும்"**

களையும், சங்கடங்களையும் உணர்ந்து நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய காப்புறுதிக் கம்பனிகளாக மாற்றப் பட வேண்டும். ஆனால் அவ்வாறல்லாமல் எங்களுடைய நிதி கொள்ளையடிக்கப்படுகின்றது. எங்கள் மக்களின் சின்ன சின்ன சேமிப்புகள் எல்லாம் கொள்ளையடிக்கப்படுகின்றன. வீட்டுக்கு தேவையில்லாத பல நூற்றுக்கணக்கான பொருள்கள் இந்த நிதி குத்தகைக் கம்பனிகளினால் சராசரியான மத்தியதர வர்க்கம் அல்லது அதற்கு கீழ்ப்பட்ட குடும்பங்களின் வீடுகளில் கொண்டுபோய் போடப்படுகின்றன. பின்பு அது கொஞ்ச காலத்துக்கு பிறகு பயன்படுத்தப்படாமல் அல்லது பயன்படுத்த முடியாமல் பறித்தெடுக்கப்படுகின்றன. இந்த முறை மாற்றப்பட வேண்டும். எமது சமூகத்தின் தொழிநுட்ப ஆற்றல்களையும் தகமைகளையும் மேலே கொண்டு வருவதற்கு நாங்கள் நிரம்ப போட்டிகளை உருவாக்க வேண்டும். வெகுமதிகளை அறிமுகப்படுத்த வேண்டும். பட்டங்களை சான்றிதழ்களை பதக்கங்களை வழங்க வேண்டும்.

ஐந்தாம் வகுப்பு, சாதாரண தரம், உயர்தர சோதனைகளுக்காக போட்டி போடுகின்ற அதில் கூட புள்ளிகள் எடுத்ததாக பெருமைப்படுகின்ற அம்மா அப்பாக்கு அப்பால் சாதனைகளுக்காக பெருமைப்படுகின்ற சமூகத்தை உருவாக்க வேண்டும். சாதனைகள் என்பது இந்த போட்டி, சோதனைகளால் பெறப்படும் புள்ளிகள் அல்ல. அதற்கும் மேலால் தொழிநுட்ப தளத்திலும் அறிவியல் தளத்திலும் ஆக்கத் தளத்திலும் சாதனைகள் செய்யக்கூடிய மனித தொகுதியொன்றை உருவாக்க வேண்டும். அதற்காக நிறுவனங்கள் முன்னுக்கு வர வேண்டும்.

புலம்பெயர் சமூகத்தின் சிந்தனைப் போக்கு மாற வேண்டும். அவர்கள் கடந்த 10 வருடங்களாக தாங்கள் பங்களிப்புச் செய்த அந்த மனித நேயம் என்கின்ற அந்த நிலையில் இருந்து மாறி ஆக்க பூர்வமான முதலீடு, மற்றும் தமிழ்ச் சமூகத்தை நிலை நிறுத்துவதற்கான அரசியல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான முதலீடாக தங்களுடைய சேமிப்பை கொண்டு வர வேண்டும். அங்குள்ள ஒவ்வொரு தனி மனிதர்களின் சேமிப்பு சிறியதாக இருக்கலாம். ஆனால் அவர்கள் தங்களுக்குள் இணைந்து ஒரு கூட்டு முதலீடாக இங்கு கொண்டு வர வேண்டும். அவ்வாறு கொண்டுவருவதனூடாக தான் இந்தப் பிரதேசத்தின் மனித வளத்தை மேம்படுத்த முடியும். தொழிநுட்ப ஆற்றல்களை மேம்படுத்தலாம். இங்குள்ள வளம் சார்ந்த தொழில் துறைகளை மேம்படுத்தலாம். அதே போன்று வேறு கைத் தொழில்களையும் இங்கே வளர்க்க முடியும்.

எனவே எங்களுக்கு முன்னால் உள்ளது மிகப்பெரிய சவால். அந்த சவாலை வெற்றி கொள்வதற்காக நாங்கள் எவ்வாறு ஒரு பெரிய பரந்த தொலைநோக்குக் கொண்ட ஒரு வரைபடத்தை வைத்துக் கொண்டு சிந்திக்கப் போகின்றோம்? இது தான் எங்களுக்கு முன்னால் உள்ள கேள்வி. அல்லது நாங்கள் கிடைக்கின்ற நிதிகளுக்காக அல்லது குறுங்கால நன்மைகளுக்காக சிந்திக்கப் போகிறோமா? அல்லது எங்களால் சாத்தியமானதை மட்டும் செய்து திருப்திப்பட்டுக் கொள்வோம் என்கிற சோம்பல்தனத்துக்கு பலியாகப் போகிறோமா? நாங்கள் செய்பவை சிறுசிறு திட்டங்களாக இருக்கும் என்று சொன்னால் அது இவ்வாறே கரைந்து கொண்டு போகின்ற ஒரு இனத்தினுடைய ஒரு சாபக் கேடாகவே அமைந்து விடும்.

எங்களுக்கு அவ்வாறு எதுவுமே தேவையில்லை. எங்களுடைய தலைமைத்துவத்தை தொலைநோக்கு கொண்டதாக மாற்ற வேண்டும். வழிகாட்ட வேண்டும். எங்களுடைய அபிவிருத்தி திட்டம் என்பது அரசியல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாக இருக்க வேண்டும். நாங்கள் போடுகின்ற ஒவ்வொரு சதமும் ஒவ்வொரு முதலீடாக மாற வேண்டும். அறிவியல் தொழிநுட்பத்தாலும் மேம்படுத்தப்பட்ட ஒரு மனித வளமாக தேசத்துக்கும் சமூகத்துக்கும் பயன்பட வேண்டும். அவ்வாறு பயன்படும் போது தான் இந்தச் சமூகம் மீண்டும் தன்னை நிலைநிறுத்தும். அது தான் இன்று எங்களுக்கு முன்னால் உள்ள சவால்.

அதற்கு எங்கள் மத்தியில் இன்று தேவைப்படுவது சிந்தனைத் தூண்டலும் விவாதமும் ஆகும். அந்த விவாதத்தை யார் துவங்குவது என்பது கேள்வி அல்ல. எல்லோரும் துவங்க வேண்டும். நாங்கள் எம் சிறு குழாம்களுக்குள் அந்த விவாதத்தை தொடங்க வேண்டும். எவ்வாறு மீளவும் எழும்பப் போகின்றோம். அரசியல் கட்சிகள் என்கின்றவற்றுக்கு அப்பால் குழுநிலை வாதத்துக்கு அப்பால் பிராந்திய வாதத்துக்கு அப்பால் பல்வேறு துறைசார் அறிவுஜீவிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரிவினை வாதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்று சேர்ந்து தேசத்தைக் கட்டியெழுப்பல் என்கிற உன்னத கனவோடு எவ்வாறு பயணிக்கப் போகின்றோம் என்பதனை தீர்மானிக்கின்ற நேரம் வந்து விட்டது.

# நெருக்கடியான காலங்களில் ஒலித்த குரல் ஓய்ந்தது



## மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை - நினைவுப் பகிர்வுகள்

**ஓய்வுநிலை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை கடந்த 01.04.2021 அன்று அமரத்துவ மடைந்திருந்தார். தமிழ்மக்களுக்கு அரணாக இருந்த ஆயரின் இழப்பால் தமிழர் தேசமே துயரத்தில் ஆழ்ந் திருந்தது. ஆயர் குறித்த நினைவுப் பகிர்வுகள் கீழே,**

### போர்க்காலங்களில் தமிழ்மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்தார்

**– அருட்சகோதரி அனுசலா அலெக்சாண்டர் –**

ஏழை மக்கள் மீது பேரன்பு கொண்டவர். எந்த அதிகாரங்களை கண்டும் பயப்படாதவர். நான் பொதுத் தாதியாக பணியாற்றத் தொடங்கிய காலம், இறுதி யுத்தகாலப்பகுதியில் என்னையும் மன்னார் மருத்துவ மனையில் வேலை செய்வதற்கு ஆயர் அழைத் திருந்தார். எந்த நேரமும் மருத்துவமனையிலேயே இருப்பார். காயமடைந்த இளம் பெண் பிள்ளை களை புலனாய்வுத்துறையினரின் மிரட்டலில் இருந்து பாதுகாத்தார். யாரும் தேடி வந்தால் ஆயர் தான் பொறுப்பு என்று சொல்லச் சொல்லி அந்த பெண் களிடம் கூறுவார். இறுதிப்போரில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த வவுனியா இடைத்தங்கல் முகாம் களிலும் சேவையாற்றிய போது எங்களது குழுவின ருக்கு தொடர்ச்சியாக சந்திப்புகளை வைத்து அறிவுறுத்தல்களை வழங்குவார். அந்த மக்களுக்கு மருந்துப் பொருட்களுடன் உணவுப் பொருட்களும் சேர்த்து வழங்கினார். ஆபத்தான இடங்களுக்கு அவரது வான் தான் முன்னுக்கு போகும். பிறகு தான் ஏனைய வாகனங்கள் பின் தொடரும். எந்தவொரு சிக்கலான இடத்திலும் துணிந்து முன்னுக்கு நிற்பார் ஆயர். அதனை நான் என் அனுபவத்தில் கண்டுள்ளேன்.

### தமிழினத்தின் விடுதலைக்காக குரல் கொடுத்தவர்

**– அருட்தந்தை நெவின்ஸ் –**

தமிழினத்தின் விடுதலைக்காக முன்னின்று குரல் கொடுத்த ஒரு தலைவர் என்று கூறலாம். தன்னுடைய 23 வருட ஆயர் பணியிலே அவர் கிறிஸ்த வர்களுக்கு மாத்திரமல்ல முழு தமிழர்களுக்குமே நல்ல தலைமைத்துவத்தை அமைத்துக் கொடுத்து எல்லா மக்களையும் ஒன்று சேர்த்தவராக இருந்தார். சமயம் கடந்து எல்லோருக்கும் நல்ல வழிகாட்டியாக இருந்தார். தமிழ்மக்களின் துன்பமான நேரங்களில் அவர்களோடு இருந்து அவர்களின் துன்பங்களில் இரண்டறக் கலந்து கொண்டவர். அது மாத்திர மல்ல எத்தனையோ தமிழ் இளம் யுவதிகளுடைய விடுதலைக்காக பாடுபட்டவர். சிறைச்சாலைக்கு சென்று அவர்களை சந்திப்பது அவர்களின் விடுதலைக் கான முயற்சிகளை எடுப்பது வரை ஏராளமான பணிகளை ஆற்றி இருக்கிறார்.

வன்னியில் மக்கள் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்ற வேளைகளில் எல்லாம் அங்கே சென்று அவர்களோடு தங்கி அவர்களது துன்பங் களில் இரண்டற கலந்து கொண்ட ஒருவர். நெருக்கடி யான காலங்களில் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் நிலைமைகளை எடுத்துச் சென்ற ஒருவர். எங்கேனும் குண்டுத்தாக்குதலில் மக்கள் இடம்பெயர்ந்து விட்டால் அடுத்த நிமிடமே அங்கே நிற்பார். அவரைப் பார்த்து நாமெல்லாம் மெய் சிலிர்ப்பதுண்டு.

### தமிழ்த் தேசிய அரசியலில் மிகவும் உறுதியாக இருந்தார்

**– யோதிலிங்கம்–**

தமிழ் அரசியல் வரலாற்றிலும் தமிழ் பண்பாட்டு வரலாற்றிலும் மறக்க முடியாத ஒரு ஆளுமை தான் இராயப்பு யோசப். தமிழ் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் அவருடைய பங்களிப்பு என்பது நான்கு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது.

முதலாவது, சாட்சியமற்ற ஒரு போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் அவர் மக்களினுடைய

## "சாட்சியமற்ற ஒரு போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் அவர் மக்களினுடைய சாட்சியாக விளங்கினார். மக்களினுடைய குரலாக விளங்கினார். மக்கள் படும் துயரங்களை அவர் உலகெங்கும் உரத்துக் கூறினார்"

சாட்சியாக விளங்கினார். மக்களினுடைய குரலாக விளங்கினார். மக்கள் படும் துயரங்களை அவர் உலகெங்கும் உரத்துக் கூறினார். அதைவிட மரண மடைந்த மக்களினுடைய தொகை தொடர்பில் அரசாங்கம் குறைத்துக் கூறிய போது ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மக்கள் இப்போரில் இறந்திருக் கிறார்கள் என புள்ளிவிபரங்களோடு கூறினார். இப்படி கூறிய போது பல்வேறு அச்சுறுத்தல்கள் வந்தன. இருந்தபோதும் எதையும் கணக்கெடுக்காமல் முன்னோக்கி நகர்ந்தார்.

இரண்டாவது, தமிழ்த் தேசிய அரசியலில் மிகவும் உறுதியாக நின்றார். 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதனை தொடர்ந்து தமிழ் அரசியல் சூழலில் இரண்டு வகை யான விவாதங்கள் இடம்பெற்றன. ஏற்கனவே காலம் காலமாக பின்பற்றி வந்த அந்த தமிழ்த் தேசிய அரசியலை ஏதொவொரு வகையில் தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது அதனைக் கைவிட்டு விட்டு அரசாங்கத்தோடு சமரச அரசியலுக்கு செல்வதா என்கிற ஒரு விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத் தின் போது, இல்லை தமிழ்மக்களின் கூட்டிருப்பை யும் கூட்டுரிமையையும் கூட்டு அடையாளத்தையும் பேணுவதற்கு ஏதோவொரு வகையில் தமிழ்த் தேசிய அரசியலை தொடர்ந்தும் முன் கொண்டு செல்வது தான் சரியானது என்ற தீர்மானத்துக்கு அவர் வந்தார். இது மிகவும் முக்கியமான விடயம். அதனை தொடர்ந்து மக்கள் மத்தியில் கருத்து ருவாக்கத்தை மேற்கொள்வதற்காக சிவில் சமூகம் உருவாக்கப்பட்ட போது அதன் தலைவராகவும் அவர் பொறுப்பேற்றார்.

மூன்றாவது, தமிழ்த் தேசிய சபையை உருவாக்குவதற்காக அவர் எடுத்த முயற்சிகள். பாலஸ்தீனத்தில் எப்படி பாலஸ்தீன விடுதலை இயக்கங்களையும் பாலஸ்தீன பொது அமைப்புகளை யும் இணைத்து பாலஸ்தீன தேசிய சபை உருவாக்கப் பட்டதோ அதே போல இங்கேயும் தமிழ்த் தேசிய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். இதற்காக தமிழ் அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புகளையும் மன்னார் ஆயர் இல்லத்துக்கு அவர் அழைத்து அங்கே ஒரு வலுவான கலந்துரையாடலையும் நடத்தி யிருந்தார். அந்தக் கலந்துரையாடலின் பெறுபேறாக உண்மையில் ஒரு தமிழ்த் தேசிய சபை உருவாக்கு வதற்கான சூழல் ஏற்பட்டது. ஆனாலும் தமிழ் அரசி யல் கட்சிகள் அதற்கு போதியளவு ஒத்துழைக் காததால் அவருடைய அந்த முயற்சி வெற்றி பெற வில்லை. ஆனாலும் பிற்காலத்தில் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்பு தோற்றம் பெறுவதற்கு உண்மையில் இராயப்பு யோசப்பினுடைய முயற்சி தான் அடித்தளமாக இருந்தது.

தமிழ்மக்கள் எதிர்நோக்குகின்ற நெருக் கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் தமிழ்மக்கள் பலமாக இருக்க வேண்டும். தமிழ்மக்கள் பலமாக இல்லாமல் இந்த நெருக்கடி களுக்கு முகம் கொடுக்க முடியாது. ஆகவே அரசி யல் கட்சிகள் பொது அமைப்புகளை இணைத்து ஒரு பொதுக் குடையின் கீழ் தமிழ் மக்கள் செயற்படுகின்ற போது தான் தமிழ்மக்கள் பலமாக இருக்க முடியும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

நான்காவது, போர்க்காலத்தில் இடம்பெற்ற இனவழிப்புக்கு சர்வதேச விசாரணை வேண்டும். சர்வதேச நீதி வேண்டும் என்ற கோரிக்கையில் அவர் உறுதியாக நின்றமை தான். இந்த இடத்தில் அவர் வல்லரசுகளால் முன்வைக்கப்பட்ட நிலைமாறுகால நீதிக் கோட்பாட்டை ஏற்கவில்லை. நிலைமாறுகால நீதிக் கோட்பாடு என்பது அரசாங்கத்திடமே பொறுப்பை ஒப்படைகின்ற செயற்பாடு. அவர் அதனை நிராகரித்தார். ஏனெனில் குற்றம் செய் தவனிடமே நீதி வழங்கும் கோட்பாட்டை வழங்க முடியாது என்பது இயற்கை நீதிக் கோட்பாடு. அதன் அடிப்படையில் நிலைமாறுகால நீதிக் கோட்பாட்டை நிராகரித்து பரிகார நீதிக் கோட்பாட்டை தான் அவர் முன்னெடுத்த நிலைமையையும் நாங்கள் பார்க் கின்றோம்.

தமிழ்மக்களுடைய அரசியல் பண்பாடு தொடர்பில் அவர் என்ன நினைத்தாரோ அதன் தொடர்ச்சியை நாங்கள் பேணுவது தான் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு நாங்கள் செய்கின்ற மிகப் பெரிய அஞ்சலியாக இருக்கும்.

**(13 ஆம் பக்கம் பார்க்கவும்)**

# ஈழத்தமிழர்களுக்கும் - தமிழகத்துக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருக்க வேண்டும்?

-சி.அ. யோதிலிங்கம்-




தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி அமைந்துள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பில் நாங்கள் வலுவான கரிசனையை செலுத்துவது அவசியமாகும்.

**ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு ஒரு முக்கியமான இடத்தில் உள்ளது.**

**முதலாவது காரணம்,** நீண்டகாலமாக இனம், மொழி அடிப்படையில் ஒன்றிணைந்த உறவு அதாவது தொப்புள் கொடி உறவு.

**இரண்டாவது விடயம்**, ஈழத்தமிழர்கள் ஒரு சிறிய தேசிய இனம். அவர்கள் தங்கள் அக ஆற்றலை மட்டும் வைத்துக் கொண்டு தங்களின் விடுதலையைப் பெற்று விட முடியாது. தங்களின் புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு சேமிப்பு சக்திகளையும், நட்பு சக்திகளையும் இணைக்க வேண்டிய தேவை உள்ளது. வலுவான சேமிப்பு சக்தி என்பது தமிழக மக்களும், மலையக மக்கள் உட்பட உலகெங்கும் வாழ்கின்ற தமிழக வம்சாவளித் தமிழ் மக்கள் ஆவர். நட்பு சக்திகள் என்று பார்க்கின்ற போது உலகத்தில் இருக்கின்ற முற்போக்கு ஜனநாயக சக்திகளை சொல்லலாம். சிறிய தேசிய இனமாகிய தமிழ் மக்கள் தங்களுடைய புற ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு தமிழ்நாட்டோடு உறவை வலுப்படுத்த வேண்டியது அவசியமானது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு பலவழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. **முதலாவது**, அதனுடைய கேந்திர முக்கியத்துவம். புவிசார் அரசியலில் ஈழத்தமிழர்களின் தாயகப் பிரதேசமான வட கிழக்கு மட்டும் கேந்திர முக்கியத்துவமான இடத்தில் உள்ளது என்றில்லை, தமிழ்நாடும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் தான் இருக்கிறது. தமிழ்நாட்டின் கேந்திர பலம் வடக்கு-கிழக்கின் கேந்திர பலத்தை விட சற்று உயர்வானது. ஏனெனில் அதன் பின்னால் பெரும் நிலத்தொடர்ச்சி உள்ளது. இரண்டு கேந்திர பலமும் இணைகின்ற போது தமிழ்மக்களின் பலம் என்பது மிகவும் உயர்வானது. இது பூகோள அரசியலில் பேரம் பேசுவதற்கான ஆற்றலை வலுவாக வழங்கக் கூடியதாக இருக்கும்.

**இரண்டாவது,** தமிழ்நாட்டின் சனத்தொகை. இப்போது 7 கோடி பேர் வாழ்கின்றார்கள். இலங்கையைப் போல் ஐந்து மடங்கு சனத்தொகை. தமிழ்நாட்டுக்கு வெளியேயும் பல மாநிலங்களில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். சர்வதேச அரசியலில் நாங்கள் பலமான நிலையில் இருப்பதென்றால் எண்ணிக்கை என்பது முக்கியமானது. சர்வதேச அரசியல் சந்தைப் பொருளாதாரத்துக்குள்ளால் தான் வலுவாக இயங்குகின்றது. தமிழ்நாடும் உலகத்தமிழர்களும் எங்களோடு இருக்கின்ற போது, எங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவர்கள் தயங்குகின்ற நிலைமை ஏற்படும். இந்த விடயத்திலும் தமிழ்நாடு முக்கியத்துவம் வாய்ந்தது.

**மூன்றாவது,** தமிழ்நாடு இந்திய மைய நீரோட்ட அரசியலில் இருந்து வெளியே நிற்கிறது. திராவிடக் கட்சிகள் தான் மாறி மாறி ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை இருக்கின்றது. ஏற்கனவே தனிநாட்டுப் போராட்டத்தை நடத்திய ஒரு மாநிலம். மைய நீரோட்ட அரசியலுக்கு வெளியில் நிற்பதும் எங்களுக்கு சாதகமானது. அவர்களும் மத்திய அரசால் ஒடுக்கப்படும் நிலை உள்ளது. மைய நீரோட்ட அரசியலில் தமிழ்நாடு இருக்குமாக இருந்தால் எங்களுடைய அரசியலில் அதிக அக்கறை காட்டாது. இவையெல்லாம் மிகவும் முக்கியமானவை.

ஈழத்தமிழர்களுக்கு தேவை இருக்கிறது. தமிழ் நாடு முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருக்கிறது. இரண்டையும் நாங்கள் இணைத்துப் பார்க்கின்ற போது, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையில் ஒரு பிரிக்க முடியாத அம்சமாக தமிழ்நாடு இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டைக் கையாள்வதற்கு நாங்கள் உண்மையில் தயாராக வேண்டும். தமிழ்நாட்டை வலுவான முறை யில் கையாள்வதன் ஊடாகத் தான் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அவர்களின் பங்க ளிப்பை வினைதிறனுடன் பெற்றுக் கொள்ளக் கூடிய தாக இருக்கும். கையாள்வதில் எப்படியான முறைகளை பின்பற்ற வேண்டும் என்கிற ஆய்வு அவசியமானது.

அதில் முதலாவதாக தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் களின் நலன்களைப் பேணுவதற்காக இணைப்பு அலு வலகம் ஒன்றை உருவாக்குவது மிகவும் அவசியமானது என்று நினைக்கிறேன். அந்த இணைப்பு அலுவலகம் தமிழ்நாட்டோடு தொடர்புடைய விடயங்களையும் அதே போல் ஏனைய மாநிலங்களோடு தொடர்பு டைய விடயங்களையும் தமிழ்நாட்டின் ஊடாக மத்திய அரசை கையாளுகின்ற விடயங்களையும் மேற் கொள்ளலாம். இந்த அலுவலகத்திற்கு கட்சி அரசி யலுக்கு அப்பால் சிவில் சமூகத்தரப்பில் இருந்து நபர்களை தெரிவு செய்து பணிக்கமர்த்தலாம்.

இரண்டாவது, அரசியல் கட்சிகளைக் கையாள் வது. தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளைக் கையாளும் போது அங்குள்ள கட்சியரசியலுக்குள் மாட்டுப்படாமல் கவனமாக இருக்க வேண்டும். பெரிய கட்சிகள் சிறிய கட்சிகள் என்று எந்த வேறுபாடும் இல்லாமல் அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் எங்களுக்குத் தேவை. நாங்கள் அவர்களிடம் பொதுக் கோரிக்கையை வைக்க வேண்டும். உங்களுக்குள் ஆயிரம் பிரச்சினைகள் பிரிவினைகள் இருக்கலாம். முரண் பாடுகள் இருக்கலாம். ஆனால் எங்கள் விவகாரத் தில் நீங்கள் ஒற்றைக்குரலில் பேச வேண்டும். ஒருங் கிணைந்து செயற்பட வேண்டும் என்கிற கோரிக்கை களை நாங்கள் வைக்கலாம். அப்படி வைக்கின்ற போது தான் வினைத்திறனுடைய செயற்பாடுகளை அவர்கள் மூலம் செய்யக்கூடியதாக இருக்கும்.

**“ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையில் ஒரு பிரிக்க முடியாத அம்சமாக தமிழ்நாடு இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டைக் கையாள்வதற்கு நாங்கள் உண்மையில் தயாராக வேண்டும்”**

தமிழ்நாட்டில் அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையிலான பிரச்சினைகளில் நாங்கள் ஒரு பக்கச் சார்புநிலை எடுக்கக் கூடாது. அந்த தலைவர்களைப் பற்றிய விமர்சனங்களைக் கூட நாங்கள் தவிர்ப்பது நல்லது. அதனை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொள்ளட்டும்.

ஈழத்தமிழர் விவகாரத்தை இந்திய மயப்படுத் தியதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு முக்கிய மானது. கருணாநிதியால் உருவாக்கப்பட்ட டெசோ அமைப்புக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த தலைவர்கள் குறித்த மாநாடு களில் பங்கேற்று இருக்கிறார்கள். நாங்கள் திரும்பவும் திராவிட முன்னேற்றக் கழகத்தை கேட்டுக் கொள்வது யாதெனில், திரும்பவும் டெசோ அமைப்பை மீள கட்டி யமைத்து எமது பிரச்சினைகளை இந்திய மயப்படுத் துங்கள்.

இதனை விட தமிழ்நாடு சட்ட சபையில் ஜெயல லிதா முதலமைச்சராக இருந்த போது ஏற்கனவே மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்று இனவழிப்பு தீர்மானம், இரண்டாவது சர்வதேச விசாரணை தீர்மானம். மூன்றாவது பொது வாக்கெடுப்பு தீர்மானம். ஆகவே இந்த மூன்று தீர்மானங்களையும் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல வேண்டும்.

மத்தியஅரசு ஈழத்தமிழர்களுக்கு எதிராக போகின்ற போது அதை தடுக்கின்ற செயற்பாட்டை தமிழக கட்சிகள் இணைந்து செயற்பட்டு நிறுத்த வேண்டும். தமிழ்நாடு அரசியற் கட்சிகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு அங்குள்ள கட்சி அரசியல் தான் முக்கியமானது. எங்களது விவகாரம் இரண்டாம் பட்சமானது. எங்கள் விவகாரத்தை முதலாவதாக மாற்றுங்கள் என்று கேட்க முடியாது. அவர்களது கொள்ளளவுக்குள் அவர்களால் செய்ய முடிந்ததுக்கு தான் நாங்கள் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டு அரசியல் கட்சி களுக்கும் இடையிலான உறவு என்பது நலன் சார்ந்தது தான். அவர்களுக்கு தேர்தல் அரசியல் இருக்கிறது. எங்க ளுக்கு எம்மின அரசியல் இருக்கிறது. ஆனால்

அங்குள்ள மக்களுக்கும் எங்களுக்குமான உறவு நலன் சாரா உறவு. தமிழ்த் தேசிய விடுதலைக்காக அவர்களில் 28 பேருக்கும் மேல் உயிர்நீத்திருக்கின்றார்கள். ஆகவே அந்த விடயத்தை கவனத்தில் கொண்டு தமிழ்நாட்டு மக்கள் அமைப்புகளையும் கட்சிகளையும் எப்படி கையாள்வது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

ஆயுதப் போராட்டம் நடந்த போது இயக்கங்கள் எல்லாம் அரசியற் கட்சிகளுடன் தான் உறவுகளை வளர்த்துக் கொண்டார்களே ஒழிய அங்குள்ள சிவில் அமைப்புக்களுடன் தங்கள் உறவுகளை பெரிய எவுக்கு வளர்த்துக் கொள்ளவில்லை. இன்று சிவில் அமைப்புகளுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. சட்டத்தரணிகளாக இருக்கலாம், ஆசிரியராக இருக்கலாம், ஊடகவியலாளர்களாக இருக்கலாம் அவர்களுடனெல்லாம் தனித்தனி உறவுகளைப் பேணி எங்களுக்கு ஆதரவான ஒரு வலுவான சிவில் தளத்தை உருவாக்க வேண்டும். அப்படியான சந்தர்ப்பத்தில் அங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தங்களை கொடுக்க கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கலாம். ஏனைய மாநிலங்களிலும் ஈழத்தமிழர் விவாகரத்தை பேசுபொருளாக்க வேண்டும்.

இலங்கைத்தீவு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு எல்லைக்குள் உள்ளது. இந்தியா எப்போதுமே இலங்கைப் பிரச்சினையில் அக்கறையாகத்தான் இருக்கும். ஆனால், இந்தியாவுக்கு முழு இலங்கைத் தீவுமே தேவை என்றபடியால் தமிழர் விவகாரத்தை இரண்டாம் பட்சமாகத் தான் வைத்திருக்கப் பார்க்கும். சில வேளைகளில் தமிழர் நலனைப் புறக்கணித்து சிங்கள தேசத்துடன் உறவைப் பேணுவதில் கவனமாக இருக்கக் கூடிய நிலையும் வரும். ஆகவே அந்த நேரத்தில் தமிழர்களின் நலனையும் பேணுவதில் வலுவான அழுத்தத்தைக் கொடுப்பதற்கு தமிழ்நாட்டின் உதவியும் ஏனைய மாநிலங்களின் ஆதரவும் தேவை ஏனைய மாநிலங்களிலும் நாம் கவனமெடுத்து செயற்படுவது அவசியமான விடயமாகும். ஈழத்தமிழர்கள் மத்திய அரசை நேரடியாக யைாள வெளிக்கிடும் போது வலுவான அழுத்தத்தை கொடுக்க முடியாது. தமிழ் நாடும், ஏனைய மாநிலங்களும் இணைந்து அழுத்தத்தை கொடுக்கும் போது ஒரு வலுவான அழுத்தத்தை கொடுப்பதற்கான வாய்ப்பு வரும்.

தமிழ்நாடு எங்களோடு இருக்குமானால் இந்தியா எங்களோடு இருக்கும். இநதியா எங்களோடு இருக்குமானால் உலகமே எங்களோடு இருக்கும். ●

---

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

## இவரைப்போல் துணிந்து குரல் கொடுத்த ஆயர்களைக் காண்பது அரிது!

**– நிலாந்தன் –**

தென்னாபிரிக்காவின் ஆயர் டெஸ்மன் டூட்டூவைப் போலவும் கிழக்குத் தீமோரின் ஆயர் வெலோவைப் போலவும் லத்தீன் அமெரிக்காவின் விடுதலை இறையியலை போதித்த வாழ்ந்து காட்டிய அதனாலேயே கொல்லப்பட்ட மதகுருக்களைப் போலவும் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இராயப்பு யோசப் ஆயர் அவர்கள் முக்கியமான ஒரு மதகுரு.

ஒடுக்குமுறைக்கெதிராக குரல் கொடுத்த மறைந்த மன்னார் ஆயரும் தமிழ்மக்களால் நினைவு கூரப்படுவார். கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தவரையிலும் அவர் ஒரு சர்ச்சைக்குரிய ஆயராகவே இருந்தார். அவரைப் போல துணிந்து குரல் கொடுத்த ஆயர்களைக் காண்பது அரிது. அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ்ப்பரப்பில் ஒரு மதகுரு இவ்வாறு ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் குரல் கொடுத்தமை என்பது கவனிப்புக்குரியது. மிகவும் முக்கியமானது. நெருக்கடியான காலகட்டத்தில் முழுச் சமூகமும் அச்சத்தினாலும், தோல்வியினாலும், கூட்டுக் காயங்களினாலும், கூட்டு மன வடுக்களினாலும் அமுந்திப் போயிருந்த ஒரு கால கட்டத்தில் அவர் தான் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தவர்.

குறிப்பாக 2009 க்குப் பின்னிருந்த ஒரு பயங்கர சூழலில் ஓர் அச்ச சூழலில் ஒரு பயப் பிராந்திக்குள் முதலில் துணிச்சலாக ஒலித்த ஒரு சிவில் குரல் அவருடையது. ஒரு மதகுருவாக இருந்த காரணத்தினால் ஒரு ஆயராக இருந்த காரணத்தினால் அவரால் அவ்வாறு துலக்கமாகவும் சன்னமாகவும் துணிந்தும் கதைக்க முடிந்தது. அவர் தொடக்கி வைத்த அந்த பாதையில் தான் இன்று நிறைய வெவ்வேறு மத பிரமுகர்கள் வந்துவிட்டார்கள். வெவ்வேறு சிவில் சமூகங்கள் வந்து விட்டன. இன்று சிவில் சமூகங்கள் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியை நடத்தும் நிலைக்கு வந்துள்ளது என்று சொன்னால் எல்லாவற்றுக்கும் அந்தப் பாதையை திறந்து விட்ட பெருமை ஆயரைப் போன்ற மிகச் சிலருக்குத் தான் உண்டு. ●



**“நினைவு கூரலை அதிகம் மக்கள் மயப்படுத்த வேண்டும். அது மக்கள் மயப்படுத்தப்பட்டால் எந்த வைரஸ் வந்தாலும் அதனைத் தடுக்க முடியாது. எந்த தனிமைப்படுத்தல் சட்டத்தாலும் தடுக்க முடியாது. அரசாங்கத் தாலும் தடுக்க முடியாது”**

# நினைவு கூரலை மக்கள் மயப்படுத்த வேண்டும்

கடந்த மாதங்களோடு ஒப்பிடுகையில் இந்த மாதம் தொற்று நோயின் வீரியம் அதிகமாக உள்ளது. இதனால் தனிமைப்படுத்தல் சட்டங்களை முன் வைத்து அரசாங்கம் நினைவேந்தல்களை தடுக்கும் நிலைமை தான் உள்ளது. மே தின ஊர்வலங்களும் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தலுக்கு அனுமதிப்பார்கள் என எதிர் பார்க்க முடியாது. போன முறையும் இதே நிலை தான் இருந்தது. நாம் மாற்று ஏற்பாடுகள் குறித்து யோசித் திருக்க வேண்டும். பௌதீக ரீதியாக தமிழ் மக்களை ஓரிடத்தில் திரட்டுவது சாத்தியமற்றது எனும் போது, மாற்று வழிகளில் எவ்வாறு நினைவு கூர்வது என்பது தொடர்பில் யோசிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்,

முதலாவது, மெய்நிகர் வழியில் நினைவு கூர யோசிக்கலாம். இன்று கல்வியும் மெய்நிகர் வழியில் தான் போதிக்கப்படுகிறது. பல சந்திப்புகளும் மெய் நிகர் வழியிலேயே இடம்பெறுகின்றன. சமூகமே zoom க்குள் தான் நிற்கிறது.

இரண்டாவது, இது மிகவும் முக்கிய மானது. நினைவு கூரலை அதிகம் மக்கள் மயப்படுத்த வேண்டும். அது மக்கள் மயப்படுத்தப்பட்டால் எந்த வைரஸ் வந்தாலும் அதனைத் தடுக்க முடியாது. எந்த தனிமைப்படுத்தல் சட்டத்தாலும் தடுக்க முடியாது. அரசாங்கத்தாலும் தடுக்க முடியாது. தடுக்கப்பட முடியாத நினைவு கூரல் என்பது அதிகம் மக்கள் மயப்படுவதில் தான் தங்கி உள்ளது. அதனை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்று யோசிக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு மக்கள் மயப்படுத்து கின்றோமோ அந்தளவுக்கு தடுக்கப்பட முடியாத ஒன்றாக அது மாறும்.

ஏற்கனவே தமிழ் மக்கள் மத்தியில் மத ரீதி யிலான அனுட்டானங்கள் உள்ளன. எந்த நிர்ப்பந்தமு மின்றி தாங்களாக அதனை செய்யும் நிலைக்கு மக்கள் மயப்படுத்த வேண்டும். யார் மக்கள் மயப்படுத் துவது? கட்சிகள் தான் செய்ய வேண்டும். செயற் பாட்டாளர்கள் தான் செய்ய வேண்டும். இதுக்குரிய ஒரு பொதுக்கட்டமைப்பு செய்ய வேண்டும்.

முதலாவதாக நினைவு கூர்தல் பொருட்டு ஒரு பொருத்தமான பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நினைவு கூர்தல் தொடர்பில் இன்னமும் எங்களிடம் ஒரு பொதுக் கொள்கை உருவாக்கப் படவில்லை. நினைவுகூர்தலில் பல்வகைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் மட்டும் நடக்கவில்லை. முள்ளிவாய்க்காலோடு முடியவும் இல்லை. 1949 இல் நில அபகரிப்பு தொடங்கியதோ அப்போதிருந்தே தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக கூட்டிக் கட்டும் அம்சங்களின் மீதான தாக்குதல் தொடங்கியது.

இனப்படுகொலை என்பது மக்களை தேசிய இனமாக கூட்டிக் கட்டும் அம்சங்களை அழிப்பது.

அப்படிப் பார்த்தால் 1949 இல் நில ஆக்கிரமிப்பு தொடங்கிய போதே இனவழிப்பு தொடங்கியது.

2009 பங்குனி, சித்திரை, வைகாசி மாதங் களில் அதிகரித்த தொகையினர் குறுகிய காலத் துக்குள் குறித்த நிலப்பகுதியில் கொல்லப்பட்டார்கள் என்பது தான் இங்கே கவனத்திலெடுக்க வேண்டிய விடயமாக உள்ளது. இந்த அடிப்படையில் பொது மக்கள் அதிகம் இறந்த காலப்பகுதியாக அதனை எடுத்துக் கொண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதற் கான நாளாக அதனை அனுட்டிப்பது என்று பார்த் தால் இது விடயத்தில் பொது உடன்பாட்டுக்கு வர வேண்டிய தேவை உள்ளது. அதனை தொடர்ந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கலாம். அந்த பொதுக் கட்டமைப்பு எல்லா மாவட்டங்களும் தழுவியதாக சம்பந்தப்பட்ட எல்லாரும் தழுவியதாக அமைக்கப்பட வேண்டும். இது முக்கியமானது. எல்லாரும் சேர்ந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கிய பிறகு தான் நாங்கள் முழு அளவுக்கு மக்கள் மயப்பட்ட ஒரு நினைவு கூர்தலைப் பற்றி யோசிக்கலாம். முள்ளிவாய்க்காலில் ஒரு நினைவுச்சின்னத்தை வைக்கிறது மட்டும் போதாது. தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட எல்லா இனப்படுகொலைக் களங்களிலும் அவ்வாறு நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட வேண்டும்.

இனப்படுகொலையை நினைவு கூருவது என்பது ஒரு நாளுடன் அல்லது ஒரு மாதத்துடன் முடிவடைவது அல்ல. ஒவ்வொரு பிரதேசங்களிலும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூருவது என்பது அந்தந்த இடங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். இப்படியாக தான் நாங்கள் நினைவு கூரலை பரவலாக் கலாம். மக்கள் மயப்படுத்தலாம். நினைவு கூர்தலை எந்தளவுக்கு பரவலாக்குகின்றோமோ அந்தளவுக்கு மக்கள் மயப்படும். தன்னியல்பாக மக்கள் தாங்களாக செய்யும் ஒன்றாக அது மாறும் போது எல்லோரும் துணிந்து தங்கள் வீட்டு மதில்களில் விளக்கேற்றும் போது அது மக்கள் மயப்பட்டு விடும். விரதங்கள் அனுட்டிப்பது போல பண்டிகைகள் கொண்டாடப் படுவது போல மக்கள் மயப்பட்டு விடும்.

இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந் தலை ஒரு பெருந்தொற்று காலத்தில் எவ்வாறு அனுட்டிப்பது என்பது தொடர்பில் கலந் துரையாடப் பட்டதாக தெரியவில்லை. தொற்று வீரியமாகி வரும் நிலையில் இராணுவ மருத்துவ அரசியல் சூழலில் இம்முறையும் நினைவு கூர்தல் மக்கள் மயப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்ப தாகவே தெரிகிறது. நினைவு கூரல் மக்கள் மயப்பட வில்லை என்றால் மெய் நிகர் வழியில் தான் ஓரள வுக்கு செய்ய முடியும்.

**“நினைவு கூரல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இழப்புகளுக்கான நீதி கோரிய போராட்டத்தின் ஒரு பகுதி. கூட்டு துக்கத்தை கூட்டு ஆக்கசக்தியாக மாற்றும் இடம் அது”**

நினைவு கூரலை சிறுதிரள் நிகழ்வாகவும் சடங்காகவும் சுருக்கவும் முடியாது. நினைவு கூரல் எந்தளவுக்கு மக்கள் மயப்படுகிறதோ எந்தளவுக்கு அனைத்துலக மயப்படுகிறதோ அந்தளவுக்கு தமிழ் மக்களின் அடுத்த கட்ட அரசியலையும் இயக்கும் உந்துவிசையாக அது மாறும்.

நினைவு கூரல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இழப்புகளுக்கான நீதி கோரிய போராட்டத்தின் ஒரு பகுதி. கூட்டு துக்கத்தை கூட்டு ஆக்கசக்தியாக மாற்றும் இடம் அது.

கடந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இனப்படு கொலை ஆர்மேனியன் இனப்படுகொலை. இந்த நூற்றாணடின் மிகப்பெரிய இனப்படுகொலை முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை. இந்நூற்றாண்டின் மிகப்பெரிய மனித படுகொலை இது. பெருந் தமிழ்ப் பரப்பின் நவீன அரசியல் வரலாற்றில் இப்படி ஒரு குறுகிய காலப்பகுதியில் கொத்தாக மக்கள் கொல்லப்படவில்லை. தமிழ் என்ற அடையாளத் தில் பெருந்தமிழ்ப் பரப்பை ஒரே உணர்ச்சிப் புள்ளி யில் நாங்கள் இணைக்கலாம். அப்படி உணர்ச்சிப் புள்ளியில் இணைப்பதன் மூலம் தான் தமிழ் மக்கள் தங்களுக்கு நடந்தவைகளுக்காக நீதி கோரும் அந்தப் போராட்டத்தை அதிக பட்சம் மக்கள் மயப் படுத்தலாம். அந்தளவுக்கு அனைத்துலக மயப்படுத்த லாம்.

# நம் பூமியை மீட்டெடுப்போம் - சர்வதேச பூமி தின செய்தி

இந்தப் பூமியையும் அதில் உள்ள உயிரினங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் உலக பூமி தினம் வருடாந்தம் ஏப்ரல் 22 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இப்புவியானது மனிதர்கள் உட்பட பல கோடி உயிரினங்களின் உணவு, உறைவிடத்தை உறுதி செய்யும் பெரும் இயற்கை தொகுதியாகும். 'நம் பூமியை மீட்டெடுப்போம்' என்பதே இந்தாண்டின் கருப்பொருள். ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச்சூழல் மாசுபாடு, மழையின்மை, பூமி வெப்பமடைதல் என்பன அதிகரித்து வருகின்றன. இது மனித வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இயற்கை இல்லாமல் ஒரு நிமிடம் கூட மனிதனால் வாழ முடியாது. சூழலை மாசடையாமல் அடுத்த தலைமுறையிடம் எடுத்து செல்ல வேண்டும். அவர்கள் பூமியின் எதிர்காலத்தை காப்பாற்றுபவர்கள். இயற்கையை நாம் கவனித்துக் கொண்டால் இயற்கையும் நம்மை பாதுகாக்கும். சர்வதேச பூமி தினம் தொடர்பில் நிமிர்வு ஊடகத்தின் காணொளியூடாக பல்வேறு கருத்துகளையும் பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராஜா அவர்கள் பகிர்ந்து கொண்டிருந்தார். பூமி தினத்தின் முக்கியத்துவம் கருதி அவர் கூறிய பல்வேறு விடயங்களையும் இங்கே எம் வாசகர்களுக்காக பகிர்ந்து கொள்கிறோம்.

இயற்கையை நாங்கள் பேணி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்து அமெரிக்காவில் 50 ஆண்டுகளுக்கு முதல் 1970 ஆம் ஆண்டில் 2 கோடி மக்கள் தெருவிலிறங்கி ஆர்ப்பாட்டங்களை செய்து வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து இந்த நாள் அன்று பூமி தினமாக அறிவிக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு ரேச்சல் கார்சன் என்ற அறிவியல் அறிஞர் ஊமையாகிப் போன வசந்தங்கள் (silent spring) என்ற பெயரில் ஆங்கிலத்தில் தன் ஆய்வின் இறுதியில் வெளியிட்ட நூல் அமெரிக்க மக்களின் உள்ளத்தை பெருமளவில் தொட்டது. DDT என்ற கிருமி நாசினியை அதன் விவசாயத்துக்கான பயன்பாட்டை ஆய்வு செய்த அந்த அறிஞர் தன்னுடைய வாழ்நாளிலே இயற்கையில் தாராளமாக தெளிக்கப்பட்ட அந்த நச்சுப் பொருளின் விளைவாக,




**"இப்புவியானது மனிதர்கள் உட்பட பல கோடி உயிரினங்களின் உணவு, உறைவிடத்தை உறுதி செய்யும் பெரும் இயற்கை தொகுதியாகும். 'நம் பூமியை மீட்டெடுப்போம்' என்பதே இந்தாண்டின் கருப்பொருள்"**

தான் இளமையில் கேட்டுப் பழகிய பறவைகளினதும் குருவிகளதும் சத்தங்கள் இல்லாமல் போனதை உணர்ந்து தன்னுடைய நூலை வெளியிட்டு பின் முக்கியமான செயற்பாடுகளில் இறங்கி மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி இருந்தார்.

அன்றைய பூமி தினம் முதலில் அமெரிக்காவிலும் பின் உலகளாவிய மட்டத்திலும் இந்த நாள் ஒரு அவசியமான பேசுபொருளாக இயற்கையையும் பூமியையும் நாங்கள் அவதானமாக எங்கள் வாழ்க்கைக்காக அதனை நிலைபேறான வகையில் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனையில் உருவாகியது. 1970 ஆம் ஆண்டின் இறுதியிலேயே அமெரிக்கா முதன் முதலில் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக சூழல் பாதுகாப்புக்கான அரச நிறுவனமான US EPA: United States Environmental Protection Agency ஐயும் உருவாக்கியது. பின் பல்வேறு நாடுகளிலும் இந்த அமைப்பு உருவானது.

இந்த நாளின் முக்கியத்துவம் எதுவென்று பார்த்தால் சூழலை நாங்கள் இன்று பல்வேறு வழிகளில் சிதைத்திருக்கின்றோம். எம்முடைய வாழ்க்கை நடைமுறைகளினால் பாதிப்புக்களை நிரந்தரமாக ஏற்படுத்தி இருக்கிறோம். காலத்திற்கு காலம் வெவ்வேறு வகையான மாற்றங்களை ஏற்படுத்தியதன்

பின் விளைவுகளை அனுபவித்துக்கொண்டிருக் கின்றோம். காலநிலை சிக்கல் – climate crisis இன்று பூமி எதிர்கொண்டிருக்கும் பாரிய சவால்.

இயற்கைக்கு பாதிப்பில்லாமல் நம் வாழ்க்கையை மறுசீரமைப்பது எப்படி? நம் நடைமுறைகளை மாற்றுவதற்கு ஏதும் வாய்ப்புகள் உண்டா? சிதைந்து போன இயற்கையின் கூறுகளான காடுகள், கரை யோரங்கள், கடல், நீர்நிலைகள், மண் உட்பட்ட எல்லாவற்றையும் மறுசீரமைப்பது இந்த ஆண்டுக் கான முக்கிய குறிக்கோளாக உள்ளது. இவ்வாண்டு சர்வதேச பூமி தினத்தின் மகுட வாசகமாக "பூமியை மீளமைத்தல் – restore our eartn" உள்ளது. பல கோடி உயிரினங்கள் வாழும் பூமியில் மனிதர் களாகிய நாங்கள் தான் எங்களது அதீத செயற் பாடுகளால் நம் பூமிக்கு ஆபத்தை தேடி வருகிறோம்.

உண்மையில் பூமியை எங்களால் மாற்றிய மைக்க முடியாது. நாம் சார்ந்துள்ள சூழலை, எமக் கும் அதற்குமான பிணைப்பினை மாற்றியமைக் கலாம் என்ற தோரணையில் அது ஒரு கருப் பொருளாக முன்வைக்கப்பட்டுள்ளது. 70 களில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் தொடர்ச்சி 2021 இல் super earth day என்று சொல்லப்படுகிறது. 2 கோடி மக்களின் வேண்டுகோளின் பேரில் பூமி தினம் அனுட்டிக்க ஆரம்பித்து இப்போது 50 ஆண்டுகள் கடந்து விட்டன. கொரோனாவுக்கு முதல் 190 நாடு களில் ஏறத்தாழ 100 கோடி மக்கள் பங்குபற்றிய நாளாக உலளாவிய ரீதியில் இது இடம்பெற்று வந்தது.

சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக மக்கள் நேரடியாக பங்குபற்ற முடியாமற் போனதால் மெய்நிகர் வழி யில் – கணனி ஊடாக பல்வேறு நிகழ்வுகள் உலகம் முழுவதும் இடம்பெற்றன. அந்த நாளில் அமெரிக்க ஜனாதிபதியின் தலைமையில் climate summit என்ற பெயரில் உச்சி மாநாடும் இடம் பெற்றது. இதில் இளையோர்கள், சிறார்கள், பள்ளி மாணவர்கள் என பலரும் பங்குபற்றினார்கள். இந் நாளில் உலகெங்கும் 3 கோடி ஆசிரியர்கள் பூமியை பாதுகாப்பதில் கற்றலின் பங்கு தொடர்பில் பல்வேறு கற்றல் சார்ந்த செயற்பாடுகளில் இறங்கியிருக் கின்றார்கள். பிரித்தானியாவில் "COP 15 - 2020 UN Biodiversity Conference - பல்லுயிர் வகைமைக்கான பெருமாநாடு" என்று அழைக்கப் படுகின்ற காலநிலை மாற்றத்திற்கான உச்சி மாநாடு இவ்வருட இறுதியில் இடம்பெற இருக்கிறது. இவ் வகையில் இவ்வாண்டு பூமி தினம் பல வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**"இம் முறையும் சர்வதேச பூமி தினமன்று இலங்கையில் 5 நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் யாழ்ப்பாணத்தில் இயற்கை வழி இயக்கத்தின் ஏற்பாட்டில் மெய்நிகர் வழியிலான உரையாடல் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது"**

இந்தநாளைத் தொடர்ந்து நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு செயற்படலாம்? எங்களுக்கு இருக்கின்ற பொறுப்புகள் தொடர்பில் என்னென்ன வேலைகளை செய்யலாம் என்று யோசித்தால் இவை பல வகைகளில் அடங்கும். பூமியை மீளமைத்தல் எனும் போது சூழல் மாசடை தல் ஒரு பக்கம், தொழிநுட்பம், அறிவியல் தரு கின்ற நவீனங்களையும் கையில் எடுத்துக் கொண்டு அவற்றையும் தாண்டி தனிமனிதர்களாக சமூக மட்டத் திலும் சில பொறுப்புக்களை நாமே கையில் எடுத் தால் மட்டும்தான் எம்முடைய இருப்பும், எம்முடைய இயற்கையும் ஒருங்கிணைந்த வகையில் தொடர்ந் தும் எம் வாழ்க்கையை நடத்தலாம் என்பது தெட்டத் தெளிவாக தெரிகிறது.

மனிதனது தேவைகளை மையப்படுத்திய, மனிதர்களுக்காக தான் பூமியின் வளங்கள் இருக் கின்றன என்கிற சிந்தனையை தாண்டியவர்களாக எம்முடைய இருப்பு இந்த வளங்களை பேணிப் பாதுகாப்பதில் தான் தங்கியிருக்கின்றது என்கிற அக்கறையோடு நாங்கள் செயற்பட வேண்டும். இந்த கோவிட் 19 தந்த பாடங்களை தெரிந்தவர்களாக, பட்டுத் தெளிந்தவர்களாக செயற்படத் தொடங்க வேண்டும்.

இயற்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றம் தான் கோவிட் 19ஐ முன்னுக்கு தள்ளிக்கொண்டு வந்தி

ருக்கின்றது என்கிற தெளிவோடு நாங்கள் முன்னோக்கிப் போவோமாக இருந்தால் எம்முடைய வாழ்க்கையில் ஒரு அடக்கம், எளிமை, பணிவு, பொறுப்புணர்வு, பரந்தமனம் கொண்ட கூட்டு முயற்சி என்பவை தான் எங்களைக் காப்பாற்றும் என்பதனை நாங்கள் புரிந்தவர்களாக இருப்போம். ஏனெனில் இதுவரை நாங்கள் நடந்து கொண்ட முறைகள் எங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட தன்மை, நிலத்தடி நீர் மாசடைந்து கொண்டிருக்கின்ற தன்மை, அதற்கு எப்போதும் எக்காலத்திலும் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் கிடைக்கும் என்ற வாய்ப்பு எப்போதும் உண்டு என்கிற நிலையை மாற்றி, கடல்நீரை நன்நீராக மாற்றி வேண்டியளவு தருவோம் என யார் சொன்னாலும் அதனை இரண்டு கரங்களும் நீட்டி ஏற்றுக் கொள்பவர்களாக இல்லாமல் எம் பிரச்சினைகளுக்கு எம் கைகளிலேயே தீர்வுகளும் இருக்கின்றன என்று செயற்படுபவர்களாக மாறுவோம்.

மரபுவழி வந்த சில நடைமுறைகளை கையில் எடுத்தோமானால் அங்கே மலிவான, இயல்பான தீர்வுகள் இருக்கின்றன. விவசாய உற்பத்திகளின் போது நஞ்சுகள் தெளிக்கப்பட வேண்டுமா? இரசாயன உரங்களால் மண் மலடாவதை தடுக்க வேண்டாமா? எம்முடைய கால்தடங்கள் இப்பூமியில் எவ்வாறு பதிகின்றன? எங்கள் கால்தடங்கள் என்ன எச்சங்களை விடுகின்றன? அதன் விளைவு என்ன? பெறுமதி என்ன? இழப்பு என்ன? என்பதனை ஓரளவு கணிப்பிட தெரிந்தோமானால் நம் பூமி ஆரோக்கியமாகும், செழிப்பாகும்.

பூமியை மீளமைத்தல் என்பதன் ஊடாக நாங்கள் எம் மண்ணை மீளமைப்போம். மனங்களை மீளமைப்போம். உண்பதை மீளமைப்போம். உடுப்பதை மீளமைப்போம். எம்மையே மீளமைப்போம். எம் இயற்கை தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும். அதனால் நாங்களும் பாதுகாக்கப் படுவோம்

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

**"முருங்கைப் பயிர்செய்கையை முழுக்க முழுக்க இயற்கை விவசாயத்தின் மூலமே மேற்கொள்ளலாம். பெரிதாக முதலீடும் தேவைப்படாது"**

ஆனால், இலைக்காக முருங்கையை வளர்த்தாலும் அதிக வருமானங்களை பெற்றுக் கொள்ளலாம் என்கிற உண்மையை எம் விவசாயிகளில் பலர் அறியாத நிலை உள்ளது. நாங்கள் 500 மரங்களை நாட்டினால் வருடத்தில் ஆகக் குறைந்தது ஆறு தடவைகள் இலையைப் பறிக்கலாம்.

அப்படியான விவசாயிகள் தாங்களும் முருங்கை இலையை காய வைத்து தூளாக்கி சந்தைப் படுத்த முடியும். இல்லாவிடில் எங்கள் நிறுவனமும் ஒரு கிலோ முருங்கை இலையை 65 ரூபாவுக்கு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்கிறது. முருங்கை மரத்தை நாட்டி 60 ஆவது நாளில் இருந்து இலையை ஒடிக்க ஆரம்பிக்கலாம். முதல் அறுவடையாக ஒரு கன்றுக்கு அரைக்கிலோ அளவில் தான் எதிர்பார்க்க முடியும். ஆறாவது மாதத்துக்கு பிறகு 2 கிலோ அளவில் அறுவடை செய்யலாம். ஒரு வருடத்துக்கு பிறகான முருங்கையில் ஒரு கன்றில் இருந்து ஆகக் குறைந்தது 5 கிலோ வரையில் இலைகளை ஒடிக்கலாம். ஒரு வருட வளர்ச்சிக்கு பின்னர் ஒரு மரத்தில் இருந்து குறைந்தது 350 ரூபாவை இலைமூலம் வருமானமாக பெறலாம். ஸ்திரமான அறுவடையை ஏழு வருடங்கள் வரை நாங்கள் எதிர்பார்க்கலாம். பெரிய வருமானத்தை தரும் செய்கை முறையாகவும் இலைக்காக முருங்கையை பயிரிட்டு பெற்றுக் கொள்ள முடியும்.

நவீன விஞ்ஞான முறைமையில் பெறுமதி கூட்டப்பட்டு முருங்கை இலைப் பொருள்களை சந்தைப்படுத்தலாம். முருங்கையை காய்க்காகவும், இலைக்காகவும், விதைக்காகவும் வளர்க்கிறார்கள். முருங்கை விதையில் இருந்து பெறப்படும் எண்ணெய் இன்று உலகில் அதிகூடிய பெறுமதியுள்ள எண்ணையாக இருக்கிறது.

நிறை குறைவான பிள்ளைகளுக்கு மட்டுமல்ல அதிக நிறை கொண்ட பிள்ளைகளுக்கும் கூட முருங்கை இலை நல்ல தீர்வாக உள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள முருங்கை மரங்களை பாரியளவில் நாட்டுதல் சிறந்தது என பல்வேறு ஆய்வுகளில் நிரூபணமாகி உள்ளது.

ஆபிரிக்காவில் குடும்ப பெண்கள் தங்கள் வீட்டு வருமானத்தை அதிகரிக்க முருங்கை இலை செய்கைகளை மேற்கொண்டு பெருமளவு வருமானங்களை பெற்று வருகின்றார்கள். அதே போல் நல்ல மண் வளமுடைய எமது பிரதேசங்களிலும் முருங்கை இலை செய்கை அதிகரிக்கப்பட வேண்டும். இதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

(20 ஆம் பக்க தொடர்ச்சி)

அடுத்ததாக எந்த விடயத்தையும் கதைகள் வடிவிலே சொல்லும்போது அதனைக் கேட்கச் சிறுவர்கள் ஆர்வமாக இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். கதைகளுக்கூடாக சிறுவர்கள் மனதில் விரியும் நிலவெளிக் காட்சிகளும், அக்கதைகளில் காணப்படும் உரையாடல்களும், அவர்கள் புத்திக் கூர்மையைத் தூண்டக் கூடிய கேள்விகளும், பதில்களும் அவர்கள் அக உலகத்தை இன்னும் மிளிரச் செய்கின்றன.

சிறுவர்களிடம் காணப்படும் கற்பனைத் திறன் இயல்பிலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கொடை எனலாம். எனவே அவர்கள் கற்பனைத் திறனை வளர்க்கக் கூடிய கதைகளை அவர்களுக்குச் சொன்னால் போதும். அவர்கள் நல்ல மனிதர்களாக வருவர்.

அது மட்டுமல்லாது அறிந்திரனின் முதல் இதழைத் தொகுக்கத் தொடங்கியபோது மிகவும் பயமாக இருந்தது. சிறுவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தனை வேறு செய்து கொண்டேன். ஏனெனில் அது ஒரு விஷப்பரீட்சையாக இருந்தது. எனது உழைப்பில் சேமிக்கப்பட்ட பணத்தைக் கொண்டுதான் ஆரம்பித்தேன். ஒரு இலட்சம் என்பது என்னைப் பொறுத்த வரை ஒரு பெரிய முதலீடு.

**அறிந்திரன் இதழை ரூபா.20/= க்குக் கொடுக்கிறீர்கள். எப்படி அது சாத்தியமாகிறது?**

உண்மையிலேயே ஒரு இதழை ஒரு சிறுவனின் கையில் கொண்டு சேர்க்க எனக்கு ரூபா.40 செலவாகிறது. ஆனால் அவர்களிடம் ரூபா.20 ஐ தான் பெற்றுக் கொள்ளுகிறோம். ஒவ்வொரு இதழிலும் எனக்கு ஏற்படும் இழப்பீட்டை எனது உறவினர்களும் நண்பர்களுமே தந்துதவுகிறார்கள். அது மட்டுமல்ல அவர்களே என்னை இதில் ஊக்கப்படுத்துகிறார்கள். அவர்கள் எனது நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாது அதனால் ஏற்படக் கூடிய சமூக நன்மைகள் என்னவென்று அவர்களுக்குத் தெரிகிறது. சமூகம் இதன் தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ளுகின்ற வரைக்கும் இந்த விலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

**தற்போது ஐந்தாவது இதழ் அச்சிலிருப்பதாகத் தெரிகிறது. இதுவரை இந்த இதழுக் கூடாகப் பெற்ற அனுபவம் என்ன?**

**“சிறுவர்கள் வாசிக்க விரும்புவதில்லை என்று சொல்லப்படுவதில் உண்மை இல்லை. அவர்கள் வாசிக்க விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் வாசிக்க விரும்புகின்ற புத்தகங்கள் அவர்களுக்கு அருகில் இல்லை. அல்லது அவர்கள் கண்ணில் படுவதில்லை”**

சிறுவர்கள் வாசிக்க விரும்புவதில்லை என்று சொல்லப்படுவதில் உண்மை இல்லை. அவர்கள் வாசிக்க விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் வாசிக்க விரும்புகின்ற புத்தகங்கள் அவர்களுக்கு அருகில் இல்லை. அல்லது அவர்கள் கண்ணில் படுவதில்லை. பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்படும் நிதியில் அதிகம் பயிற்சிப் புத்தகங்களும் வேறு நூல்களுமே வாங்கப்படுகின்றன. அதில் கதைப் புத்தகங்களை வாங்குவதற்குரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. இவற்றை எனது நண்பர் ஒருவர் சொல்லிக் கவலைப்பட்டதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பொதுவாகப் பிள்ளைகளுக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டு அதனை அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கும் வழக்கம் எம்மத்தியில் இல்லை. ஒரு வகைத் திணிப்புச் சமூகமாக நாம் இருக்கிறோம். உணவு , கல்வி தொடக்கம் திருமணம்வரை பிள்ளைகள் தீர்மானிக்க முடியாது. பெரியவர்களே அவற்றைத் தீர்மானிக்கிறார்கள். அது மிகவும் கொடுமையான விடயம் என்பேன்.

எனக்குத் தினம் வரும் கடிதங்களும் தொலைபேசி அழைப்புகளும் மிகவும் மகிழ்சியைத் தருகின்றன. சிறுவர்கள் வாசிக்கிறார்கள். கதை எழுதுகிறார்கள். கட்டுரைகளை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை மாதந்தோறும் பிரசுரித்து வருகிறேன். என்னிடம் வந்து குவிந்திருக்கும் சிறுவர்கள் எழுதிய படைப்புகள் ஏராளம் உண்டு. அவற்றை எல்லாம் மாத இதழில் பிரசுரிக்க இடம் போதாது. எனவே தற்போது சிறப்பு மலர் ஒன்றினை (அல்பம்) வடிவமைத்துக் கொண்டு இருக்கிறேன். அதில் எனக்குக் கிடைத்த அத்தனை சிறுவர்களின் படைப்புகளையும் பிரசுரிக்க உள்ளேன்.

# சிறுவர்கள் வாசிக்க விரும்புவதில்லை என்று சொல்லுவதில் உண்மை இல்லை

### "அறிந்திரன்" ஆசிரியர் அனுபவம் இது





"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற பொன்மொழிக்கேற்ப நம் ஏட்டுக் கல்வி கடந்து, பரந்த உலக ஞானத்தை வளர்த்துக் கொள்வதில் சிறுவர் சஞ்சிகைகள் முக்கிய இடத்தைப் பெற்றவை. ஆனால் இன்றைய நவீன சூழலில் ஆகப் பெரிய தமிழர் இருப்பைக் கொண்ட இந்தியாவில் கூட ஒரு சிறுவர் சஞ்சிகை தானும் நீண்ட கால இருப்போடு தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலை எழுந்திருகின்றது.

இன்றைய சிறார்கள் வாசிக்கிறார்கள் இல்லை என்கிற குற்றச்சாட்டு பொதுவாகவே முன்வைக் கப்பட்டு வருகின்றது. டிஜிட்டல் சாதனங்களை அதிகம் பயன்படுத்த தொடங்கியதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்ற கருத்தும் உண்டு.

அம்புலிமாமா, பாலமித்திரா, ரத்னபாலா போன்ற சிறுவர் கதை இலக்கியங்கள் சார்ந்த இதழ்களோடு கோகுலம், சுட்டி விகடன் போன்ற பரந்த வாசிப்பு எல்லையைக் கொண்ட சஞ்சிகைகளும் தம் இருப்பைக் கலைத்து விட்டன. இன்று சிறுவர் இதழ்களுக்கு பெரும் வெற்றிடம் ஏற்பட்டுள்ள இந்தச் சூழலில் ஈழத்தில் இருந்து "அறிந்திரன்" என்ற சிறுவர் இதழ் வெளிவருவதோடு, எடுத்த எடுப்பிலேயே அதற்கு ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்தும் வாசகர் களை ஈர்த்தது அதன் முதல் வெற்றி எனலாம்.

"ஈழத்துச் சஞ்சிகை உலகில் வாசகனுக்குச் சஞ்சிகையைத் திணித்தல் என்ற அவல நிலையையும் களைந்ததோடு இலக்கியத் தடத்தையும் அது பதித் திருக்கின்றது." என எழுதியிருக்கிறார் கானா பிரபா.

அந்தவகையில் அறிந்திரன் சிறுவர் சஞ்சிகை பற்றி மேலும் சில தகவல்களைப் பெறும் நோக்கில் அதன் ஸ்தாபகரும் ஆசிரியருமான கணபதி சர்வானந்தாவைத் தொடர்பு கொண்டோம்.

சிறார்களுக்கான சஞ்சிகையை வெளிக் கொணர்வதோடு மட்டுமல்லாமல் அந்த இதழ்கள் சிறார்களின் கைகளில் சென்று சேர வேண்டும் என் கிற நோக்கத்தோடு ஊர் ஊராக தெருத்தெரு வாக அலைந்து திரிந்து சிறார்களின் கைகளில் சேர்த்து வருகிறார் அறிந்திரன் ஆசிரியர். சிறார் களின் வாசிப்பு பழக்கத்தை மீளவும் தூண்டி வருகிறார். குழந்தைகளோடு குழந்தைகளாகவே மாறி அவர்களோடு பல்வேறு விடயங்களையும் உற்சாகத்தோடு பகிர்ந்து கொள்வார். இப்போது பல சிறார்கள் தாங்கள் ஆர்வமாக அறிந்திர னுக்கு எழுதி வருவதாகவும் கூறுகிறார். எம்முடைய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு.

**இதுவரை நான்கு சஞ்சிகைகள் வெளிந் திருக்கிறது. மாறுபட்ட தோற்றம். வித்தியாசமான வடிவமைப்பு. பெரும்பாலும் கதைகளாகவே விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மிருகங்கள், பறவைகள் என்பனவற்றை அடித்தளமாகக் கொண்டு புனையப்பட்டவைகளாக அந்தக் கதைகள் காணப் படுகின்றன. எனவே அறிந்திரனின் நோக்கம் என்ன?**

பொதுவாகச் சிறுவர்கள் மத்தியிலே காணப் படும் இயல்பு என்ன? அவர்கள் முன் பல பொருட் கள் வைக்கப்பட்டால். அதில் வித்தியாசமானதாக இருப்பதையே அவர்கள் விரும்புவர். எனவே மாறு பட்டதாக வடிவமைப்பு இருக்க வேண்டும் என விரும் பினேன். அதுபோலவே தோற்றத்திலும் கவனம் செலுத்தினேன்.

(19 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 17.05.2021 அன்று வெளியிடப்பட்டது.